1981 மார்ச் 6]

குளச்சல் படகு சங்கங்களிலிருந்து வேலை நீக்கம் பெற்றவர்கள்

@ * 71 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மத்திய அரசினுடைய ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மீன்துறையைச் சார்ந்த, கன்னியாகுமரி மாவட்ட குளச்சல் படகு சங்கங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களில் எத்தனை பேர் 1—10—1980 நாளன்றுள்ளபடி வேலையின்றி இருக்கிறார்கள் ?

(இ) அவர்களிடமிருந்து அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா ?

(உ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) எழுபத்தேழு நபர்கள் வேலையின்றி இருக்கிறார்கள்.

(இ) ஆம்.

(உ) அரசுக்கு வந்த முறையீடு தக்க நடவடிக்கைக்காக மீன் துறை இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. முறையீட்டில் தங்களுக்கு மீன் துறையிலோ அல்லது தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திலோ வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று அவர்கள் கோரியிருந்தார்கள். இக்கோரிக்கை ஏற்க இயலாதது என மீன் துறை இயக்குநர் அவர்களுக்குத் தெரிவித்து விட்டார். எனினும், குளச்சல் படகு கட்டும் கூட்டுறவு சங்கத்தில், ஒருங்கிணைந்த கிராமிய வளர்ச்சித் திட்டத்தின் மூலமும், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவியுடனும் படகுகள் கட்ட உத்தரவுகள் பெற்று சில நபர்களுக்காவது வேலை வாய்ப்பு அளிக்க இயலுமா என்று ஆராயப்பட்டு வருகிறது. நாகர் கோயில் மீன்துறை உதவி இயக்குனர் இதுபற்றி நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. ம. சங்கரலிங்கம் : ஐந்து லட்சம் பேர்களுக்கு வேலை கொடுக்கிற மத்திய அரசுத் திட்டத்தின் கீழ்தான் இவர்கள் அன்றைக்கு நியமிக்கப் பட்டார்கள். ஐந்து ஆண்டு நிதி உதவியை மத்திய அரசு கொடுக்கிறது. ஐந்து ஆண்டுகள் முடிந்த பிறகுகூட, மாநில அரசு தான் அவர்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் வேலையை விட்டுப் போகச் சொல்லாமல், தொடர்ந்து வேலையை நீட்டித்துக் கொடுக்க வேண்டும். வேலையிலிருந்து அவர்களை நீக்கக்கூடாது என்பது மாநில அரசுக்குள்ள பொறுப்பு. அதை ஒத்துக்கொண்டுதான் மாநில அரசும் உத்தரவு அன்றைக்கு

@ 27—2—1981 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப் பட்டது.

[1981 மார்ச் 6

பிறப்பித்திருக்கிறது. இருந்தாலும் 77 பேர்கள் குளச்சல் படகுச் சங்கங்களிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகுகூட அந்த மீன்துறையைச் சார்ந்த சங்கம் எத்தனையோ பேர்களை வேலைக்கு நியமித்திருக்கிறது. நீக்கப்பட்டவர்களில் கல்வித் தகுதியுடையவர்கள் இருந்தால், அவர்களுக்கும், அந்த வாய்ப்பினைக் கொடுத்திருக்கலாம். மீண்டும் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்வதுபற்றி இந்த அரசு புனர் பரிசீலனை செய்து உத்தரவு வழங்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல் மீனவர் கிராமத்தில் கீழ்க்கண்ட நான்கு சங்கங்கள் 1973-74ல் பதிவு செய்யப்பட்டன.

1. குளச்சல் மீன்வளக் கூட்டுறவுப் படகு கட்டும் சங்கம்.
2. குளச்சல் மீன்வளக் கூட்டுறவுப் படகு இயக்குநர் சங்கம்.
3. குளச்சல் மீன்வளக் கூட்டுறவு சேவைச் சங்கம்.
4. குளச்சல் மீன்வளக் கூட்டுறவுப் பதப்படுத்தும் சங்கம்.

குளச்சல் மீன்வளக் கூட்டுறவுப் படகு கட்டும் சங்கம் 54 உறுப்பினர்களைக் கொண்டது. அவர்களிடமிருந்து பெற்ற பங்குத் தொகை 1,37,100-ஐப் பெற்று 4—2—1974 அன்று துவங்கப்பட்டது. பங்குத் தொகையில் ரூபாய் 1,31,700 ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா உறுப்பினர்களுக்கு வழங்கிய கடனாகும். அரசிடமிருந்து ரூபாய் 4,11,000 நீண்டகாலக் கடன் பெற்று, சங்கம் 53 உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பளித்தது. ஐந்து 35 விசைப்படகுகளும், இரண்டு 30 விசைப் படகுகளும், ஒரு 25 விசைப்படகும் இச்சங்கத்தினால் சட்டப்பட்டு அவற்றில் ஒரு 32 விசைப்படகு தவிர, எல்லாப் படகுகளும் விற்பனை செய்யப்பட்டன. புதிய படகுகள் கட்ட யாரிடமிருந்தும் ஆர்டர்கள் வாராததால் சங்கம் தற்போது செயலிழந்த நிலையில் உள்ளதாகக் கூறப்படுகிறது. மேற்கண்ட சங்கங்களின் உறுப்பினர்கள், மீன்துறை அல்லது தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தில் தங்களுக்கு வேலைவாய்ப்பளிக்கக் கோரினர். தமிழ்நாடு பணியாளர் தேர்வாணைக் குழு தேர்ந்தெடுத்தவர்களோ அல்லது வேலை வாய்ப்பு நிறுவனங்கள் அனுப்பி வைக்கும் நபர்கள் மட்டுமே இத்துறைகளில் பணிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவதால் இவர்களின் கோரிக்கையை ஏற்க இயலாது என்று மீன்துறை இயக்குநர் இவர்களுக்குத் தெரிவித்து விட்டார். குளச்சல் படகு கட்டும் கூட்டுறவுச் சங்கத்தில் ஒருங்கிணைந்த கிராமீய வளர்ச்சித் திட்டத்தின் மூலமும், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவி மூலமும் படகுகள் கட்ட உத்தரவுகள் பெற்று, சில அங்கத்தினர்களுக்காவது

1981 மார்ச் 6]

வேலை வாய்ப்பளிக்க முடியுமா என்பதைப்பற்றி ஆராய்ந்து வருவதுடன், மீன் துறை உதவி இயக்குநரும் (நாகர்கோவில்) இது சம்பந்தமாக கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அவரிடமிருந்து அறிக்கை வந்தவுடன் தக்க நடவடிக்கை எடுப்பது பற்றி பரிசிலிக்கப்படும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(மூற்பகல் 11-00)

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சென்னை நகரில் போலியோ நோய் பரவி வருவது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள், சென்னை நகரில் பல பகுதிகளில் குழந்தை களை முடமாக்கும் போலியோ நோய் பரவி வருவது குறித்து ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள், அது எவ்வாறு விதிகளின்கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாகச் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னை நகரிலே திருவல்லிக்கேணி, இராயப்பேட்டை, வியாசர்பாடி, பெரம்பூர் போன்ற பகுதிகளிலே இந்தப் போலியோ நோயினாலே அண்மைக் காலமாக சில நாட்களுக்குள் மருத்துவமனைகளிலே சேர்க்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை 400 என்றும் அந்த வியாதியால் பாதிக்கப்பட்டதனால் இறந்தவர் களின் எண்ணிக்கை 40 என்றும் செய்திகள் கிடைத்திருக்கின்றன. அது மட்டுமல்லாமல் 1980 ஆம் ஆண்டைவிட இப்போது 1981 ஆம் ஆண்டிலே கடந்த 2 மாத காலத்திலே இந்நோய் பரவியது 100 சதவீதத்திற்கும் அதிகமாக இருக்கிறது. இப்படி 100 சதவீதம் அதிகமாகி இருக்கும் இந்த நேரத்திலே கூட அதற்குரிய தடுப்பு நடவடிக்கையை மருத்துவத் துறை காலாகாலத்திலே எடுக்கவில்லை என்ற எண்ணம் மக்கள் மத்தியிலே இருக்கிறது. டாக்டர்கள், நர்சுகள் கூடப் போதிய அளவிலே மருத்துவமனைகளிலே இல்லை என்றும், அப்படியே இருப்பவர்கள்கூட குழந்தைகளைக் கொண்டுவந்து சேர்க்கும் போது, போதிய அக்கறை காட்டவில்லை என்ற குறைபாடும் இருக்கிறது. ஆகவே, சுகாதார வசதி இல்லாத குடிசைப் பகுதிகள். குடிநீரே இல்லாத பகுதிகளிலேதான் இந்த நோய் மிகவும் அதிகமாகக் காணப்படுவதாகச்